செ.வெ.எண்:40 நாள்:22.03.2018

# பத்திரிக்கைசெய்தி

## அரியலூர் மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள்

அரியலூர் மாவட்டத்தில் 2017-2018ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப்போட்டிகள் தடகளம், கையுந்துபந்து, கபாடி மற்றும் நீச்சல் ஆகிய விளையாட்டுகளில் மார்ச் 2018 மாதத்திற்கு **28.3.2018** அன்று **அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் காலை 9.00 மணி** முதல் நடத்தப்பட உள்ளது.

மாதாந்திர விளையாட்டுப்போட்டிகள் தடகளம், கையுந்துபந்து, கபாடி மற்றும் நீச்சல் ஆகிய விளையாட்டுகளில் அனைத்து பிரிவினருக்கும் வயது வரம்பின்றி நடத்தப்படஉள்ளது.

தடகளம் விளையாட்டில் **100M, 200m, 400m , 1500m, நீளம் தாண்டுதல், வட்டு எறிதல், குண்டுஎறிதல்** ஆகிய பிரிவுகளில் மட்டும் நடத்தப்படும்.

நீச்சல் விளையாட்டில் 50mts, 100mts ,200mts, 400mts free Style, 50mts back Storke, 50mts breast stroke, 50 mts butterfly stroke and 200mts individual medley ஆகிய பிரிவுகளில் மட்டும் நடத்தப்படும்.

தடகளம் மற்றும் குழுப்போட்டியில் தாமதமாக வரும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்துகொள்ள இயலாது. ஒரு போட்டியாளர் இரண்டு தடகள பிரிவுகளில் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் மாணவ மாணவியர்கள் **28.3.2018** அன்று காலை 9.00 மணிக்கு மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்கு வருகை தருதல் அவசியம்.

மாவட்ட அளவிலான மாதாந்திர தடகளப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்களுக்கும், குழுப்போட்டியில் முதல் இரண்டு இடங்களைப்பெற்று வெற்றிப்பெற்றவர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் பரிசுப்பொருட்கள் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு அரியலூர் மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது ஹாக்கி பயிற்றுநர் அவர்களை தொலைபேசி எண். 9443561313-ல் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட மாவட்ட அளவிலான தடகளம், கையுந்துபந்து, கபாடி மற்றும் நீச்சல் ஆகிய விளையாட்டுகளில் அரியலூர் மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**